www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இரண்டாம் பருவத் தொகுத்தறித் தேர்வு - 2024

## ஆறாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 2.00 மணி மதிப்பெண்கள்: 60

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6×1=6

1) மாணவர் பிறர் ________ நடக்கக் கூடாது
   அ) போற்றும்படி ஆ) தூற்றும்படி
   இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி
2) பிறரிடம் நான் ________ பேசுவேன்
   அ) கடுஞ்சொல் ஆ) வன்சொல் இ) கொடுஞ்சொல் ஈ) இன்சொல்
3) பச்சைப்பசேல் என்ற வயலைக் காண் இன்பம் தரும். பட்டுப்போன மரத்தைக் காண ________ தரும்
   அ) அயர்வு ஆ) சோர்வு இ) கனவு ஈ) துன்பம்
4) நிலையான செல்வம் ________
   அ) தங்கம் ஆ) பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்
5) போர்க்களத்தில் வெளிப்படும் குணம் ________
   அ) மகிழ்ச்சி ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை
6) வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ________
   அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி

ஆ) பொருத்துக:- 4×1=4

| | | |
|---|---|---|
| 7) E-mail | - | சிற்பங்கள் |
| 8) Sculptures | - | பாரம்பரியம் |
| 9) Heritage | - | மின் இதழ்கள் |
| 10) E-Magazine | - | மின் அஞ்சல் |

இ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்க. 5×2=10

11) எது தீமையானது என்று வள்ளுவர் கூறுகின்றார்?
12) அகவினா, புறவினா வேறுபாடு யாது?
13) தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்?
14) போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?
15) நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?
16) காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?
17) கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?

ஈ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளிக்க. 3×4=12

18) நீங்கள் முதலமைச்சரானால் கல்வி முன்னேற்றத்திற்கு என்னென்ன திட்டங்களை வகுப்பீர்கள்?
19) தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?
20) தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?
21) பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் யாவை?
22) பொங்கல் விழாவின் போது உங்கள் ஊரில் என்னென்ன சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள்?

Y200 2024, 09:59

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உ) பின்வரும் மனப்பாடப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக:- 4+2=6

23) "பாயும் புயல்..........." எனத் தொடங்கும் கடலோடு விளையாடு பாடலை அடிபிறழாமல் எழுதுக.

24) "சொல்லுக......" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

ஊ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 10×1=10

25) சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க:-

i) இலைக்கு வேறு பெயர் ______ (தளை/தழை)

ii) யார் ______ தெரியுமா? (அவர்/யாது)

26) சொற்களைச் சேர்த்துச் சொற்றொடரை நீட்டி எழுதுக.

i) பொன்னன் முன்னேறினான். (வணிகம் செய்து, துணி)

27) உனக்குத் தெரிந்த இரண்டு சுற்றுலாத் தளங்களின் பெயர்களை எழுதுக.

28) மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

i) எண் வீட்டுத் தோட்டத்திள் மளர்கள் மனம் வீசின.

29) இருபொருள் தரக்கூடிய சொல்லைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைக்க படி

30) கீழ்க்கண்ட சொற்களில் உள்ள இன எழுத்துகளை எடுத்து எழுதுக

சங்கு, தென்றல்

31) பொருள் எழுதுக.

i) மாற்றார் ii) ஒப்புரவு

32) பிரித்து எழுதுக.

i) கைப்பொருள் ii) மூச்சடக்கி

33) சேர்த்து எழுதுக:-

i) பண்டம் + மாற்று ii) காடு + ஆறு

34) சொற்றொடரில் அமைத்து எழுதுக

i) நல்லவர்கள் ii) செல்வம்

எ) ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விரிவான விடையளிக்க:- 1×6=6

35) மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தபசுப் பாறையில் உள்ள சிற்பங்களைப் பற்றி எழுதுக.

36) உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.

ஏ) கட்டுரை அல்லது கடிதம் எழுதுக:- 1×6=6

37) பிறந்தநாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

38) 'காமராசர்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை - இளமைக் காலம் - கல்விப்பணி - நிறைவேற்றிய திட்டங்கள் - முடிவுரை

********

VIVO Y200 5G
Dec 11, 2024, 09:59

Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net